படத்தை வைத்துக் கொண்டே, அந்த ஊர்களின் இருப்பிடம் தெரியாமல் பிரித்ததனால்தான் இவ்வாறு ஏற்பட்டது. மேலும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் கணக்கில் வைத்துக் கொண்டு, 27 பள்ளி, 27 பள்ளி என்று பிரித்திருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளிகளினுடைய வேலைப் பளு இதோடு சேர்க்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளு கிறேன். எனவே, அரசு புனர் பரிசீலனை செய்ய உத்தரவிட வேண்டு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் கூறிய படி, இந்த மூன்று மாவட்டங்களினுடைய பெயர்களை வேண்டுமானால் எடுத்துவிடுவோம். மொத்தம் மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும். எதையெதை எடுத்துக் கொண்டு, எதையெதை வைத்துக் கொண்டு மூன்று கல்வி மாவட்டங்கள் அமைக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் யோசனை சொல்லலாம். குழித்துறை என்று கூட வேண்டாம், வேறு ஒரு பெயர் வேண்டுமானால் சொல்லுங்கள். மூன்று கல்வி மாவட்டங்கள் அமையும் வண்ணம், அவற்றில் சமமான வேலைப்பளு வரத் தக்க அளவுக்கு, பிரித்துத் தருகின்ற ஒரு யோசனை தருவார்களேயானால் மறுபடியும் இதை யோசிக்கலாம். தக்கலை, நாகர்கோவில், குழித்துறை என்பதையெல்லாம்கூட எடுத்துவிட்டு, விளவங்கோடு என்ற பெயர்கள் கூட போடலாம். பெயரைப்பற்றிக் கவலையில்லை. மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும். அதற்குக் கீழே வேலைப்பளு சமமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். வேறு எதாவது முறையில் மாற்றியமைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதப்படுமானால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஒரு யோசனை அதற்காகத் தந்தால், அதைப்பற்றி ஆராய் வதற்கு முயற்சி செய்யலாம்.

Lalgudi Educational District

*148 Q. Thiru K. S. Ganapathi : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether it is a fact that the Headmasters' Association of Turaiyur Taluk in Tiruchirappalli District has represented to Government to reallocate the newly formed Lalgudi Educational District; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

லால்குடி கல்வி மாவட்டம்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிதாக அமைக்கப்பட்ட லால்குடி கல்வி மாவட்டத்தை மீண்டும் பிரித்தளிக்குமாறு கோரி திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டத் தலைமை ஆசிரியர்கள் சங்கம் அரசுக்கு முறையீடு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, சென்ற கேள்வியைப் போலவே இதுவும் தொடர்புடைய கேள்வி. அந்த அடிப்படையிலே கல்வி மாவட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும்போது, அங்குள்ள பள்ளித் தலைமையாசிரியர்களைக் கலந்தாலோசித்து, எந்த மாவட்டத்துடன் இணைக்கலாம் என்று அவர்களுடைய கருத்தை மனதில் வைத்து ஏற்படுத்தினால், இதுபோன்ற விவகாரம் ஒன்றும் ஏற்படாது. அந்த அடிப்படையில் மறுபடியும் பரிசீலனை செய்யும்போது அங்கே உள்ள தலைமை ஆசிரியர்களுடைய கருத்துக்களையும் அறிந்து, அதற்குப் பிறகு அரசு முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதிலும் பல சிக்கல்கள் வருகின்றன. அவரவர்கள் தங்களுக்கு இருக்கின்ற நலன்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு முடிவெடுக்கிறார்கள். இப்போது இருக்கிற திருச்சி கல்வி மாவட்டத்தில் திருச்சி தாலுக்காவும், முசிறி தாலூக்காவும் அமைந்திருக்கின்றன. அரியலூரிலே, அரியலூர் தாலூக்கா, பெரம்பலூர் தாலூக்கா, துறையூர் தாலூக்கா ஆகியவை அமைந்திருக்கின்றன. லால்குடி கல்வி மாவட்டத்தில், லால்குடி தாலூக்கா, உடையார்பாளையம் தாலூக்கா என்பவைகள் அடங்கியிருக்கின்றன. கரூர் கல்வி மாவட்டத்தில் கரூர் தாலூக்கா, குளித்தலை தாலூக்கா, மணப்பாறை தாலூக்கா ஆகியவை அமைந்திருக்கின்றன. ஆகவே அந்தப் பெயரைப் பார்க்கின்றபோது, அதோடு ஒட்டிய பகுதிகளாகத்தான் வருகின்றன. சில பல மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது நான் முதலில் சொன்னதுபோல அமையுமானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம். பணிகள் சிறப்பாக நடைபெற வேண்டும். ஒரு மைய இடத்திலிருந்து கண்காணிப்புக்கு ஏற்றபடி அது அமைந்திருக்க வேண்டும் என்றுதான் இதையெல்லாம் போடுகிறோம். புது மாவட்டம் என்ற ஒன்றை உருவாக்கும்போதுதான், இந்தச் சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. மதிப்பு மிகுந்த உறுப்பினர் போன்றவர்கள் எழுதி அனுப்புவார்களானால் பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் தாலூக்கா வாரியாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரு தாலூக்கா இரண்டாகப் பிரிக்கப்படும் நிலைமைகள்கூட உண்டு. அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, நாங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம். அரசு மனமுவந்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.